# தமிழ் - மேல் நிலைக்கல்வி (304)

# (அக மதிப்பீடு) **Tutor Marked Assignment** (2026-27)

மொத்த மதிப்பெண்: 20

குறிப்பு:

(1) அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களின் அருகிலும் அதற்கான மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

(2) விடைத்தாளின் முதல் பக்கத்தில் பெயர், பதிவு எண், தாளின் பெயர் போன்றவற்றை எழுதுதல் வேண்டும்.

---

1. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2

   (அ) சிறுகதையின் உறுப்புகள் யாவை?

   (ஆ) விளம்பரச் சாதனங்கள் குறித்து எழுதுக.

2. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2

   (அ) தமிழில் முதல் இணையதளம் குறித்து எழுதுக.

   (ஆ) மின்நூலகம் என்பது என்ன?

3. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 40 முதல் 60 சொற்களுள் விடையளிக்க. 2

   (அ) டொமைய்ன்கள் என்றால் என்ன?

   (ஆ) தொடர்பு மேலாண்மை மென்பொருள் என்றால் என்ன?

4. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 100 முதல் 150 சொற்களுள் விடையளிக்க. 4

   (அ) அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி மையம் குறித்து எழுதுக

   (ஆ) காற்று மாசுபடுதல் குறித்து கட்டுரை வரைக.

5. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 100 முதல் 150 சொற்களுள் விடையளிக்க. 4

   (அ) நிகழ்வுக் குறிப்பு எடுக்கும் நுட்பங்களை விளக்குக.

   (ஆ) கீழ்கண்ட பகுதியை படித்து மூன்றில் ஒரு பங்காக சுருக்கி எழுதுக.

   இராமலிங்கரின் பிறப்பு

   இராமலிங்கர் 05-10-1823 இல் கடலூர் மாவட்டம் சிதம்பரத்திற்கு வடக்கேயுள்ள மருதூரில் பிறந்தார். அவர் தந்தையார் பெயர்

இராமையாப்பிள்ளை. தயார் பெயர் சின்னம்மாள். இவர்களின் ஐந்தாவது மகவாகப் பிறந்தார்.

இராமலிங்கத்தின் தந்தையார் இராமையாப்பிள்ளை குடும்பத்தாருடன் சிதம்பரம் கோயிலுக்குச் சென்று நடராசப் பெருமானை வணங்கினார். நுடராசப் பெருமானை வழிபட்ட பின்பு, தீட்சிதர் சிதம்பர இரகசியத் திரையைத் தூக்க, கைக்குழந்தையாகிய அடிகள் தரிசித்தார்.

கல்வி

இராமலிங்கரின் தந்தை இராமையாப்பிள்ளை இறந்து விட்டார். அவருடைய தாயார் தம் குழந்தைகளை அழைத்துக் கொண்டு பொன்னேரி என்ற ஊருக்குச் சென்றார். சில காலம் கழித்துச் சென்னைக்குச் சென்றுவிட்டார்.

இராமலிங்கத்தின் அண்ணன் இராமலிங்கரை நன்கு படிக்க வைக்க வேண்டும் என மகாவித்வான் சபாபதி முதலியாரிடம் இராமலிங்கரைக் கல்வி கற்க அனுப்பி வைத்தார்.

இராமலிங்கர் ஒரு நாள் சென்னையிலுள்ள முருகன் கோயிலுக்குச் சென்றார். தெய்வமணிமாலை பாடல்களைப் பாடினார். இதை அவர் ஆசிரியர் அறிந்தார். இராமலிங்கருக்குத் தம்மால் கல்வி கற்றுக் கொடுக்க முடியாது என மறுத்து விட்டார்,

இதை அறிந்த இராமலிங்கரின் அண்ணன் மிகவும் கோபம் கொண்டார். தன் அண்ணியாரிடம் இனி ஒழுங்காகக் கல்வி கற்கப் போவதாகக் கூறினார். அண்ணன் மாடியில் ஓர் அறை ஒதுக்கிக் கொடுத்தார்.

அந்த அறையில் இராமலிங்கர் முகம் பார்க்கும் கண்ணாடியை வைத்தார். அதற்குத் தீபம் காட்டி வணங்கினார். அந்தக் கண்ணாடியில் முருகனின் திருவுருவம் தெரிந்தது. அப்போது இராமலிங்கருக்கு ஒன்பது வயது. அந்தச் சிறு வயதிலேயே இராமலிங்கர் அனைத்துக் கலைகளையும் நன்று அறிந்திருந்தார்.

6. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒரு வினாவிற்கு 500 சொற்களுக்கு மேல் விடையளிக்க. 6

(அ) தன்விவரக் குறிப்பு -படிவம் ஒன்றை எழுதுக.

(ஆ) பின்வரும் கதையினைப் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க.

களவு போன கனவு

ஆண்டாளின் காய்கறி கடைக்கு இன்று விடுமுறை, கடைத் தொடங்கிய காலத்திலிருந்து 'பந்துக்கு' மட்டுமே கடை மூடிய ஆண்டாள் வாடிக்கையாளர்கள் நிற்பதையும் பார்க்காமல் கடையைச் சாத்தி விட்டாள்.

லுங்கியோடு திரியும் சோமு வேட்டி சட்டை அணிந்திருந்தார். பெரிய கொண்டையிட்டு முகத்தில் கால்வாசிக்கு குங்கமம் வைத்து புதுச்சேலையோடு ஆண்டாள் காட்சி தந்தாள். முதலியார் ஜவளிக்கடை துணிப்பையோடு பூப்போட்ட பாவாடை தாவணியில் ரேணுகா. சிறகு விரிக்க

ஆரம்பிக்கும் குஞ்சுப் பறவைக்கு வழிகாட்டும் தாய்ப்பறவை மாதிரி மகளை நடுவிலே விட்டு சோமுவும் ஆண்டாளும் தெருவிலே நடந்து செல்வதைப் பேட்டையே வேடிக்கைப் பார்த்தது.

நேற்று மதியத்திலிருந்தே லாட்டரிச் சீட்டில் பரிசு விழுந்தது போல ஆண்டாளுக்குள் குதூகலம். கனவு கைகூடும் போது சந்தோஷப்படுவது மனித இயற்கைதானே?

எஸ். எஸ். எல்.சி. தேர்வு முடிவு செய்தித்தாளில் வெளி வந்திருந்தது. ரேணுகா பாஸாகியிருந்தாள். நேற்று வாங்கின தக்காளி அழுகிப் போயிருந்துச்சு. கத்தரிக்கா சொத்தை... வெண்டைக்கா முத்தல், கேரட் அரை கிலோ வாங்கினா ரெண்டு நாளைக்கு வரலியே... எடைய பாத்துக்போடுங்க...

எல்லா குற்றச்சாட்டுகளையும் சிரிப்போடு சமாளிக்க வேண்டும். கொஞ்சம் முகம் சுழித்தால் அடுத்த நாள் வர மாட்டார்கள்.

மழைக்காலத்தில் உப்பு விற்கிற மாதிரி தான் காய்கறி வியாபாரமும் நேற்று ஒரு விலை. இன்று ஒரு விலை போட்டிப் போட்டுக் கொண்டு கத்தோ கத்தென்று கத்தி ஆள் பிடித்து அள்ளித் திணிக்க வேண்டும்.

ஆண்டாள் கடையில் எப்போதும் கூட்டமிருக்கும். அவள் பேச்சுதான் பலம். காய்கறிகளைப் பற்றியும் மனிதர்களைப் பற்றியும் பேசுவதில் கெட்டிக்காரி. வீட்டிலும் அலுவலகத்திலும் புழுக்கத்திலும் தொல்லையிலுமாக களைத்துப்போய் வருகிறவர்களுக்கு இவள் பேச்சு. சிரிப்பு அவசியம். ஆண்டாளுக்கு இவைகள் தாராளம்.

சோமு காய்கறி வாங்கி கடையில் கொட்டி, சாராயம் குடித்து பேட்டை வஸ்தாவாக வலம் வருவதோடு சரி. இருபது வருஷ வாழ்க்கைப் போராட்டத்தில் ஆண்டாள் சோமுவிடம் தோல்வியுற்றாலும் காலத்தை வெல்ல சபதமேற்றாள்...

(அ) ஆண்டாளின் மகள் பெயர் என்ன?
(ஆ) ஆண்டாளின் கனவு யாது?
(இ) சோமுவின் குணநலன் யாது?

---------------